DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of Judicial Magistrate Court, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 431/2020** |
| Deposition of Witness for | : PW3 |
| Name | : மாரிமுத்துகனி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 10.07.2026. |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 10 July 2026**.**

**எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது கரிவலம்வந்தநல்லூரில் வசித்து வருகிறேன். நான் மில்லில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி எனக்கு தெரியும். அ.சா.1, அ.சா.2 எனக்கு தெரியும். 2019–ம் ஆண்டு தமிழ் மாதத்திற்கு 14–ம் தேதி கரிவலம்வந்தநல்லூரில் சமுதாய நலக்கூடத்தில் வரவுசெலவு கணக்கு பார்ப்பதற்கு கூட்டம் நடக்கும். அப்போது நலக்கூடற்கு முன்பாக உள்ள ரோட்டில் அ.ச.1 நின்றுகொண்டிருந்தபோது, அ.சா.1–ம் எதிரியும்

சண்டைபோட்டு கொண்டு இருந்தார்கள். போலிசார் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

சம்பவம் நடைபெற்றதாக சொல்லக்கூடிய அன்று அ.சா.1—ன் சித்தப்பா இராமர் தான் நாட்டாமையாக இருந்தார் என்றால் சரிதான். சம்பவத்திற்கு முன்பு எதிரியின் சம்மந்தி கருப்பசாமி நாட்டாமையாக இருந்தார் என்றால் சரிதான். தற்சமயம் செல்லதுரை மற்றும் சித்திரைகனி நாட்டாமையாக உள்ளார்கள் என்றால் சரிதான். எங்கள் சமுதாயத்திற்கு பாத்தியப்பட்ட பொதுவான கிணறு உள்ளது என்றால் சரிதான். அந்த பொது கிணற்றில் 10—15 நபர்கள் கீரை பயிர் செய்து விவசாயம் செய்து வந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி பொது கிணற்றில் தான் சமுதாய பெண்கள் துணி துவைப்பார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்றதிற்கு ஒருவாரம் முன்பிருந்தே கிணற்றில் மோட்டார் வேலைசெய்யாமல் தண்ணீர் வரவில்லை என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. மேற்படி எதிரி மோட்டார் வேலை செய்யாததால் பெண்கள் துணிதுவைக்க முடியவில்லை என்று கூட்டத்தில் சொன்ன விபரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. கூட்டத்தில் அ.சா.1 மற்றும் காளிராஜ் என்பவர்கள் எதிரியை அடித்த விபரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. சம்பவத்தன்று நான் சமுதயாத்திற்கு வரி கொடுத்துவிட்டு பக்கத்தில் உள்ள கடையில் நின்று கொண்டிருந்தேன் என்றால் சரிதான். சம்பவம் எனக்கு நேரடியாக தெரியாது கூட்டமாக நின்றதால் வந்து பார்த்தேன் என்றால் சரிதான். சம்பவத்தை பற்றி எனக்கு என்ன பிரச்சனை என்ன விபரம்என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். முதல் விசாரணையில்

அ.சா.1 கேட்டுக்கொண்டதற்கினங்க பொய் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

(Sd/-)M.Mari
Judicial Magistrate,
Sankarankovil.